**நவகத்தேகம பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 29 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நவகத்தேகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

2014 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் பாது புறநெகும செயற்திட்டத்தின் கீழ் சபைக்கு கிடைத்திருந்த உபகரணங்கள் பெறுமதி இல்லாமல் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்தன.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 23,442,517 தொகையான பெற வேண்டிய கணக்கு மீதிகளில் ரூபா 2,277,893 தொகை 01 ஆண்டிற்கும் 3 இற்கும் இடைப்பட்டிருந்ததுடன் ரூபா 2,004,768 தொகை 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்டன.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 17,563,719 தொகையான செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளில் விசேட காரணங்கள் அடிப்படையில் நிறுத்திவைக்கப்பட வேண்டிய கட்டணமொன்று தவிர ஏனை பொறுப்புக்களை கொடுத்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டின் இறுதியிலான கணக்கின் பிரகாரம் ரூபா 1,485,231 கூட்டுத்தொகையான தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் தொடர்பான சொத்துக்கள் பதிவேடொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் | |
| (i) 5(7) விதி | நிதி மற்றும் களஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பாக முழுமையான காலப்பகுதி மேவுகை செய்யப்படும் வகையில் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 217 ஆம் விதி | பீ எஸ் 46 மாத்திரியின் பிரகாரம் பதிவேடொன்றில் சபைக்குச் சொந்தமான அனைத்து காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான விபரங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| தாபன விதிக்கோவை யின் VIII ஆம் அத்தியாயத்தின் 10 ஆவது உப பிரிவு | திணைக்கள தலைவரின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் சபை செயலாளர் விடுமுறை தின சேவையில் ஈடுபட்டிருந்தார் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 23,751,497 ஆக காணப்பட்டதுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,393,978 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகளில் ரூபா 20,357,519 ஆன அதிகரிப்பு தொடர்பில் உழைத்த மற்றும் வருமானம் என்பவற்றின் கூட்டுத்தொகை ரூபா 18,884,689 ஆல் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

### 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

2015 ஆம் ஆண்டில் நடைமுறச்சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களுக்கு இடையே விகிதம் 1.43:1 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டில் அது 1.52:1 ஆக இருந்தது.

### 2.4 வருமான நிருவாகம்

#### 2.4.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட நிலுவை வருமானத்தில் 85 சதவீதமான அளவு சேகரிக்கப்பட்டிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டிற்குரிய ஏனைய வருமானமாக மதிப்பிடப்பட்ட பெறுமதி மீளாய்வாண்டின் போது 76 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

#### 2.4.2 நீதிமன்ற தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

வடமேல் மாகாண பிரதான செயயலாளரிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 2,166,747 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் முத்திரைக் கட்டண பட்டோலை தயாரிக்கப்படாமையால் 2013 யூன் முதல் மீளாய்வாண்டின்

திசெம்பர் 31 ஆந் திகதி வரை பெறவேண்டிய முத்திரைக் கட்டணங்களாக ரூபா 400,000 ஆன மதிப்பிடப்பட்ட தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

ஆண்டினுள் போதியளவு வருமான மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தவோ அல்லது புதிய வருமான உழைப்பு வழிகள் தொடர்பில் தொடர்புபடுத்தலொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

நவகத்தேகம நடனக் கலை கட்டிடத்தை சபைக்கு கையேற்கும் நோக்கில் அக்கட்டிடத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 300,204 தொகை சபையினால் செலவிடப்பட்டிருந்த போதிலும் பிரதேச செயலாளரினால் அக்கைளிப்பு நடவடிக்கைககள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.3 திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்

(அ) சபை அதிகாரப்பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படும் கழிவுப்பொருட்கள் திறந்த வெளியில் இடப்படுவதால் சுற்றாடல் பாதிப்பு ஏற்படக்கூடிய நிலைமையொன்று உருவாகியிருந்தது.

(ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக காணியொன்று கையேற்கப்படாமையால் ரூபா 1,776,351 ஆன நிதிஏற்பாட்டினை திருப்பியனுப்புவதற்கு நேர்ந்திருந்தது.

### 3.4 மனித வள முகாமைத்துவம்

வருடக் கணக்காக சபையின் செயலாளர், நூலகர், வேலை காப்பாளர், குழாய் கிணறு தொழில்நுட்பவியலாளர் மற்றும் மின் தொழிநுட்பவியலாளர் பதவிகள் தொடர்ந்தும் வெற்றிடங்களாக இருந்தன.

### 3.5 விளைவற்ற சொத்துக்கள்

ரூபா 575,000 கூட்டுத்தொகையான பெறுமதியான சிறிய குபோட்டா உழவு இயந்திரமொன்றுடன் டேலரான்றும் மோட்டார் சைக்கிலொன்றும் நீர் பவுசரொன்றும் வருடக் கணக்காக விளைவற்றுக் காணப்பட்டன.

## 4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 வருடாந்த பெறுகை திட்டம்

வருடாந்த பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை செயற்படுத்துதல்

2016 ஆம் ஆண்டிற்காக சபையினால் ஒரு கணக்காய்வு மற்றும் குழுக் குழுக்கூட்டம் நடாத்தப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது எனது கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் பிரதேச சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக மேலும் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **அவதானிப்புக்கள்** |
| --- | --- |
| (அ) பாதீடு | i பயன்பாட்டு பதிவேடுகளில் உள்ள சில தகவல்கள் நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. |
| | ii நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் வாக்குப் பண பேரேடு என்பன நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) வருமானம் நிர்வாகம் | i பிரதேச சபை புதிய வருமான வழிகள் உருவாக்கம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| | ii முத்திரைக் கட்டணங்கள் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் போன்ற வருமான சேகரிப்பில் தாமதம் காணப்பட்டன. |
| (இ) களஞ்சியம் | களஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பாக போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம் | பிரதேச சபை அதிகாரப்பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படும் அனைத்து கழிவு பொருட்களையும் சுற்றாடலுடன் இணைந்த வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |